**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 525** **நாள்: 29.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மழைநீர் வடிகால் துறை அலுவலர்களுக்கு நகர்ப்புற வெள்ள மேலாண்மையில் 'பாலின சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கல்' குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி மாநகராட்சி இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிறுவன வலுவூட்டல் மற்றும் சீர்திருத்த ஆலோசகரான (Institutional Strengthening and Reform Consultant) ஐ.பி.இ குளோபல் (IPE Global) நிறுவனம் சார்பில், ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கூட்டரங்கில் மாநகராட்சி இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநகராட்சி அலுவலர்களுக்கான சிறப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி இன்று (29.09.2026) நடைபெற்றது. "நகர்ப்புற வெள்ள மேலாண்மையில் பாலின சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கல் (Gender Equality and Social Inclusion - GESI) சேர்க்கை" என்ற தலைப்பில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் பாதுகாப்பு, எளிதில் அணுகும் வசதி, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய திட்டமிடல் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்கு உடனுக்குடன் பதில் அளித்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு, நகர்ப்புற வெள்ள மேலாண்மை மற்றும் திட்டச் செயல்பாடுகளில் GESI கொள்கைகளை ஒருங்கிணைப்பது குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

வெள்ள எச்சரிக்கை, வெளியேற்றம், நிவாரணப் பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டின் போது பாலினம், வயது, மாற்றுத்திறன், வாழ்வாதாரம் மற்றும் சமூக சூழ்நிலைகள் எவ்வாறு மக்களின் பாதிப்புகளைத் தீர்மானிக்கின்றன என்பதை அலுவலர்கள் ஆய்வு செய்தனர்.

மேலும், வெறும் விழிப்புணர்வோடு நின்றுவிடாமல் அதைச் செயல்பாட்டிலும், நிறுவனப் பொறுப்புணர்விலும் கொண்டுவரும் வகையில்—திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமானம், சமூகப் பங்கேற்பு, பராமரிப்பு (O&M) மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் GESI-ஐ எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்துப் பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் விளக்கப்பட்டது.

இப்பயிற்சிக் கூட்டத்தில் மாநகராட்சியின் தலைமைப் பொறியாளர் (தரக் கட்டுப்பாடு) திரு.டி.ஞானவேல், கண்காணிப்பு பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை) திரு.ஆர்.ஏ.பிரபாகர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**